# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No. 329/2013**

| | |
|---|---|
| பெயர் | விஜயமோகன் |
| தந்தை/கணவர் பெயர் | வேணுகோபால் |
| பி.வா.த.சா | 2 |

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 23.**07.2026** அன்று **திரு. M. ராஜகுமரேசன், B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

பி.வா.த.சா. 2 – மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

<u>வாதித் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1. நான் கடலூரில் வசிக்கிறேன். நான் விவசாயம் மற்றும் தனியாக கட்டுமான தொழிலும் செய்து வருகிறேன். தாவா சொத்தை எனது தகப்பனார் 2017 ம் ஆண்டு அளந்து பார்த்தார். பணம் செலுத்தி நில அளவையர் வந்து அளந்து காண்பித்தார். அளந்து முடித்தவுடன் அறிக்கையும் வரைபடமும் நில அளவையர் கொடுத்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனாருக்கு தான் தெரியும்.

2. தாவா சொத்தில் பிரச்சனைக்குரிய இடத்தில் தென்னை மரங்கள் உள்ளனவா என்றால் ஆமாம். தென்னை மரங்களுக்கு தெற்கு பக்கம் குளம் உள்ளது என்றால் சரியல்ல. குளம் இருந்தது ஆனால் அது மூடப்பட்டுவிட்டது. நானும் எனது அண்ணனும் நிலத்தை அளந்து பார்த்தது இல்லை. சுந்தர்ராஜ் என்பவர் எங்கள் நிலத்தை பார்த்து கொள்கிறார்.

3. இந்த வழக்கிற்கு முன்னர் நடந்த வழக்குகள் மற்றும் உயர்நீதிமன்றத்தில் நடந்த வழக்கிலும் வாதி தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. குளம் இருந்த இடத்தின் அளவுகள் எனக்கு தெரியாது. தென்னை மரங்க்ள் இருக்கும் இடத்திற்கு

தெற்கு பக்கம் இருப்பது வாதியின் இடம் என்றால் சரிதான். எங்கள் வசம் 1.75 ஏக்கர் நிலம் தான் உண்மையில் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல.